283

# தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6

ந.க.எண் : 9825/அ4/இ3/2013 நாள் : 19/12/2015

------

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக் கல்வித்துறை – உதவியாளர் நேரடி நியமனம் – (Group-II A Services) (Non - Interview posts) -2013-2014ம் ஆண்டு - Phase II -தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு நியமன ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை :

1. அரசாணை (4டி) எண்.18 பள்ளிக் கல்வி (பக 4(2))த்துறை நாள் 28.10.2013
2. அரசாணை (4டி) எண்.353 பள்ளிக் கல்வி (பக 4(2))த்துறை நாள் 17.12.2013
3. அரசாணை (நிலை) எண்.34, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பி) துறை நாள்.15.04.2015
4. சென்னை–3 தமிழ்நாடுஅரசுப்பணியாளர் தேர்வாணையம், செயலரின் கடிதம் எண் :1789/PSD-G2 /2014, நாள் 29.10.2015

------

2013–2014 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நேரடி நியமனம் மூலம் உதவியாளர் பணியிடத்தில் நியமனம் செய்ய (Group-II A Services) (Non-Interview posts) தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை –04 ல் கண்ட கடிதப்படி பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட பணிநாடுநருக்கு அவரது பெயருக்கெதிரில் குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 12–ன் கீழ் உள்ள உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| தேர்வாணையப் பட்டியலில் வரிசை எண் : 82 | | |
|---|---|---|
| பணிநாடுநரின் பெயர் மற்றும் முகவரி | நிழற்படம் | நியமனம் வழங்கப்பட்டுள்ள அலுவலகம் / பள்ளி |
| **SAKTHI VEL G**<br>S.PATTY VILLAGE KONGAVEMBU PO HARUR TALK DHARMAPURI DT PINCODE:636902 DHARMAPURI DISTRICT |  | GOVERNMENT HIGH SCHOOL<br>CHINNANKUPPAM<br>DHARMAPURI DISTRICT |

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள நபர் பணியில் சேரும்போது சிவில்சர்ஜன் தகுதிக்குக் குறையாத தகுதியுடைய மருத்துவ அலுவலரிடம் உடற் தகுதிச் சான்றினை உரிய படிவத்தில் பெற்று அளித்து உடன் பணியில் சேருமாறு அறிவுறுத்தப்படுகிறது.

தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் ரூ.5200–20200 என்ற ஊதிய விகிதத்தில் ஆரம்பநிலை ஊதியத்துடன் ரூ 2800/– தர ஊதியம் மற்றும் இதர்ப்படிகள் அனுமதிக்கப்படும்.

இப்பணி நியமன ஆணை கிடைக்கப்பெற்ற ஒருவார காலத்திற்குள் நியமனம் வழங்கப்பட்டுள்ள அலுவலகத்தில் பணியில் சேரவேண்டும். பணியில் சேருவதற்குக் கால அவகாசம் கேட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது. நியமனம் செய்யப்பட்ட இடத்தில் உரிய காலத்தில் பணியில் சேராவிடில் நியமனம் பெற்றுள்ள நபரின் பெயரை தேர்வாணையத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கம் செய்யப் பரிந்துரை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நியமன ஆணை பெற்ற நபர் பணியில் சேர்ந்தவுடன் அவரது வேலைவாய்ப்பு பதிவு அட்டையை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சரண் செய்யும் பொருட்டு சார்ந்த அலுவலகத் தலைவரிடம் அளிக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

5/12/23

வட்டாரக் கல்வி அலுவலர்,
அரூர்.

தேர்வாளர் பங்குத் தொகை ஓய்வூதியத் திட்டத்தில் (Contributory Pension Scheme) மட்டும் சேரத் தகுதி படைத்தவர் ஆவார்.

நியமனம் பெற்றுள்ள நபரின் கல்விச்சான்றுகள், சாதிச்சான்று மற்றும் இதர ஆவணங்களைச் சரிபார்த்த பின்னரே பணியில் சேர அனுமதிக்க வேண்டும் எனச் சம்பந்தப்பட்ட அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நியமனம் பெற்றுள்ள நபர் முன்னிலைப்படுத்திய கல்விச்சான்றுகள், சாதிச்சான்று, மற்றும் இதர ஆவணங்கள் உண்மையானவை அல்ல என்றோ, விதிகளின்படி மதிப்பீடு செய்ய இயலாதவை என்றோ பின்னர் கண்டறியப்பட்டால் தனியருக்கு வழங்கப்பட்ட நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

மாற்றுத்திறனாளிகள் சார்பில் அவர்களது ஊனத்தின் தன்மை மற்றும் சதவீதம் மற்றும் உடல் ஊனம் அவரது பணிக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா என்பன போன்றவற்றை மாவட்ட மருத்துவ குழு மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

நேரடி நியமனம் மூலம் உதவியாளராக நியமனம் செய்யப்படுபவர்கள் தனது இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தினை தொடர் மூன்றாண்டுகளுக்குள் முடிக்கப்பட வேண்டும்.

தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினையும் கீழ்க்கண்ட தேர்வுகளிலும் கண்டிப்பாக தேர்ச்சி பெற வேண்டும்.

1. மாவட்ட அலுவலக நடைமுறை நூல்
2. பள்ளித்துணை ஆய்வர் தேர்வு தாள்–I
3. பள்ளித்துணை ஆய்வர் தேர்வு தாள்–II
4. பள்ளித்துணை ஆய்வர் தேர்வு தாள்–III
5. சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத்தேர்வு பாகம் –I

இப்பணிக்கான தனியரின் கோரிக்கை விண்ணப்பத்தின் அடிப்படையிலேயே இத்தற்காலிக நியமனம் வழங்கப்படுகிற விண்ணப்பதாரரின் கோரிக்கை விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ளவை ஏதும் பின்னர் தவறு எனக் கண்டறியப்படின் தனியரின் தேர்வு மற்றும் நியமனம் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.

மேற்படி நபர் பணியேற்றவுடன் அவரது பணியேற்பு அறிக்கையினை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இத்தற்காலிக நியமனமானது சென்னை / சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள 2013-2014 Group-II A Services –ன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளி முடிவிற்கு உட்பட்டதாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர் :

SAKTHI VEL G

நகல் :– சம்பந்தப்பட்ட அலுவலர்கள்.

நகல் :– சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்.

/உ.ந.உ.ப.அ/

முதன்மைக் கல்வி அலுவலர்

அரியலூர்

19/12/16